**ஐக்கிய அமெரிக்கத் தூதரகம்**
கொழும்பு
**ஊடக அறிக்கை**
பொது அலுவல்கள் பிரிவு
தொலை பேசி: +94 (11) 249-8100 ● தொலை நகல்: +94 (11) 244-9070
மின்னஞ்சல்: AngelicaB@state.gov ● இணையத்தளம்: http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20220616

**இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு பதிலளிப்பதற்கு 6 மில்லியன் டொலர் அவசர உதவியை அறிவிக்கும் அமெரிக்கா.**

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்திற்குள்ளான ஓரங்கட்டப்பட்ட மற்றும் இலகுவில் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக 6 மில்லியன் டொலர்களை அவசர உதவியாக அமெரிக்கா வழங்கும் என இன்று அறிவித்தது. எதிர்பார்க்கப்படும் ஒரு சர்வதேச நாணய நிதிய (IMF) பொதிக்கு இணங்க, பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்காக பொருளாதார மற்றும் நிதி சீர்திருத்த நடவடிக்கைகளை அமுல்படுத்துகையில், இப்புதிய நிதியளிப்பானது இலங்கை அரசாங்கத்திற்கு தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கும்.

"இலங்கை மக்கள் இன்றைய பொருளாதார மற்றும் அரசியல் சவால்களை எதிர்கொள்கையில் அவர்களுக்கு உதவிசெய்ய அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது" என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் தெரிவித்தார். "நீண்டகாலமாக நிலைத்திருக்கும் ஒரு அபிவிருத்திப் பங்காளராக, நிலைபேறான பொருளாதார வளர்ச்சி மற்றும் நல்லாட்சியினை ஊக்குவிக்கும் முயற்சிகளை நாங்கள் தொடர்ந்து முன்னெடுப்போம்." என அவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்க அரசாங்கத்தின் அபிவிருத்திப் பிரிவான சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் (USAID) ஊடாக வழங்கப்படும் இந்த அவசர நிதியளிப்பானது, வெளிநாடுகளில் ஏற்படும் அல்லது எதிர்பாராத சிக்கலான நெருக்கடிகளுக்குப் பதிலளிக்கிறது. இந்த நிதியளிப்பின் ஒரு பகுதியானது பாரம்பரியமாக அதிக வறுமை விகிதங்களை அனுபவிக்கும் மற்றும் நெருக்கடியால் குறிப்பாகப் பாதிக்கப்பட்டுள்ள சமூகங்களில் சிறிய அளவிலான விவசாய உற்பத்தித்திறன் மற்றும் நுண்தொழில் முயற்சிகளுக்கு உதவிசெய்வதற்காக USAIDஇன் சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க செயற்திட்டத்திற்கு (SCORE) வழங்கப்படும். வர்த்தகம், தேசிய செலவுகள் மற்றும் வருவாய் (PARTNER) ஆகியவற்றில் பெறுபேறுகளை விரைவுபடுத்துவதற்கான USAIDஇன் செயற்திட்டத்தின் ஊடாக பொதுத்துறை செயற்திறன் மற்றும் வள முகாமைத்துவம் ஆகியவற்றிற்கும் இந்நிதியளிப்பானது உதவிசெய்யும்.

புதிய உதவியாக வழங்கப்படும் 6 மில்லியன் டொலர்களானது தற்போதைய தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அமெரிக்க மக்களிடமிருந்து வழங்கப்படும் வெளிநாட்டு உதவிகளின் மிகப் பெரிய தொகுப்பின் ஒரு பகுதியாகும். இந்த உதவியானது 1956 ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா பொருளாதார மற்றும் மனிதாபிமான உதவிகளாக 2 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான உதவிகளை வழங்குவதைக் கண்ணுற்ற எம்மிரு நாடுகளுக்கிடையே பகிரப்பட்ட ஒரு வரலாற்றின் பகுதியாகும். இலங்கை மக்களின் உடனடி மற்றும் நீண்டகால தேவைகளை எதிர்கொள்வதற்கு உதவுவதற்காக இலங்கையில் அமெரிக்கா தனது குறிப்பிடத்தக்க முதலீடுகள் மற்றும் உதவிச் செயற்திட்டங்களை தொடர்ந்து அதிகரிக்கும்.

USAID இன் பணிகள் பற்றி மேலும் அறிந்துகொள்வதற்கு https://www.usaid.gov/sri-lanka. எனும் இணையத்தளத்தினைப் பார்வையிடவும்.